வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : ரோஷ்னா காசிம்

தேதி 28.11.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

- அனைவரையும் உள்ளடக்கிய, அமைதியான, ஆரோக்கியமான சமுதாயம் ஒன்றை உருவாக்க, அரசு பாடுபட்டு வருவதாக, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, கூறியுள்ளார்.
- சுதேசி இயக்கம், சிறுதானிய உணவு, யோகா உட்பட, தேசிய நன்மைக்கான 9 தீர்மானங்களை, மக்கள் உறுதியுடன் கடைபிடிக்க வேண்டும் என, பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.
- பிரதமர் திரு. நரேந்திரமோடி வரும் ஞாயிற்றுக் கிழமை, மன் கீ பாத் நிகழ்ச்சி மூலம், தமது எண்ணங்களை, மக்களுடன், பகிர்ந்து கொள்கிறார்.
- டித்வா புயல், தமிழ்நாடு-புதுச்சேரி கடற்கரையை நோக்கி நகர்ந்து வரும் நிலையில், புதுச்சேரியில் புயல் நிலவரங்களை எதிர்கொள்ள, மாவட்ட நிர்வாகம் முற்றிலும் தயார் நிலையில் உள்ளது.

-----------------------

முர்மு (12)

யோகா, மற்றும், தியானத்தை பரப்புவதன் மூலம், அனைவரையும் உள்ளடக்கிய, அமைதியான, ஆரோக்கியமான, பண்பான சமுதாயம் ஒன்றை உருவாக்க, அரசு முயன்று வருவதாக, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, கூறியுள்ளார். உலக அமைதிக்கான யோகா என்ற தலைப்பில், பிரம்மகுமாரிகள் அமைப்பினால் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள வருடாந்திர இயக்கத்தை, லக்னோவில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், அவர் தொடக்கி வைத்து பேசினார். உலகின் பழம்பெரும் நாகரீகம் இந்தியா என்றும், வசுதேவ குடும்பகம் என்பதே, இந்தியா, உலகிற்கு வழங்கும் செய்தி என்றும், அவர் குறிப்பிட்டார். உலகமே ஒரு குடும்பம்

என்னும் இக்கருத்து, முன்எப்போதையும் விட, தற்போது, உலகிற்கு அதிகம் தேவைப்படுவதால், பிரம்மகுமாரிகள் போன்ற அமைப்பினர், இக்கருத்தை பரப்புவதில், முக்கிய பங்காற்ற முடியும் என்று அவர் மேலும் கூறினார்.

------------------------

மோடி உடுப்பி 1 (12)

பிரதமர் திரு. நரேந்திரமோடி இன்று, கர்நாடக மாநிலம் உடுப்பி ஸ்ரீகிருஷ்ண மடத்தில், பகவத் கீதையின் கூட்டுப் பாராயணத்தில் கலந்து கொண்டார். உடுப்பி கிருஷ்ணர் கோவிலில், கருவறைக்கு எதிரே, பொன் வேய்ந்த தீர்த்த மண்டபத்தை, அவர் திறந்து வைத்து, கனக தாசருக்காக, பகவான் ஸ்ரீகிருஷ்ணரே ஏற்படுத்திய புனித ஜன்னலுக்கு, தங்க கவசம் அர்ப்பணித்தார்.

நதிகளின் பாதுகாப்பு, மரம் வளர்ப்பு, சுதேசி இயக்கம், வறுமை மீட்பு, இயற்கை வேளாண்மை, சிறுதானிய உணவு, யோகா உட்பட, தேசிய நன்மைக்கான 9 தீர்மானங்களை, மக்கள் ஒவ்வொருவரும் உறுதியுடன் கடைபிடிக்க வேண்டும் என, பக்தர்களிடையே பேசுகையில் பிரதமர் கூறினார். இதை முழுமையாக அமல்படுத்த, ஆன்மீகத் தலைவர்கள் ஆதரவு அளிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

மோடி உடுப்பி 2 (10)

(வாய்ஸ்)

இந்தியாவின் பாரம்பரிய ஞானத்தை, வரவிருக்கும் தலைமுறைகளுக்கும் எடுத்துச் செல்ல ஏதுவாக, பழமையான ஓலைச் சுவடிகளை பாதுகாத்து பராமரித்தல் அவசியம் என்று, உடுப்பி விழாவில் பேசுகையில், பிரதமர் வலியுறுத்தினார். இந்தியர்கள் ஒவ்வொருவரும், பாரம்பரிய சிறப்பு வாய்ந்த 25 இடங்களுக்கு சென்று பார்க்க வேண்டும் என அவர் மேலும் கேட்டுக் கொண்டார்.

விழாவில், கர்நாடக ஆளுநர் திரு. தாவர்சந்த் கெலாட், மத்திய அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். விழாவின்

போது, உடுப்பி புத்திகே மடாதிபதி சுகுணேந்திர தீர்த்த சுவாமிகள், பாரத பாக்ய விதாதா விருதை, பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு வழங்கினார்.

-----------------------

மோடி கட்டுரை (7)

குழந்தை திருமணங்கள் இல்லாத இந்தியாவை உருவாக்குவது குறித்து, மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திருமதி அன்னபூர்ணா தேவி எழுதியுள்ள கட்டுரை ஒன்றை, பிரதமர் திரு. நரேந்திர மோடி, சமூக ஊடகத்தில் பகிர்ந்து கொண்டுள்ளார். தெளிவான கொள்கைகள், தொடர்ச்சியான நடவடிக்கைகள், மற்றும், அடித்தட்டு நிலையிலான முயற்சிகள் மூலம், குழந்தை திருமணத்தை முற்றிலுமாக ஒழிக்கும் பாதையில், இந்தியா பயணித்து வருவதாக, பிரதமர் தமது பதிவில் கூறியுள்ளார்.

-----------------------

*மன் கீ பாத்* (11)

பிரதமர் திரு. நரேந்திரமோடி வரும் 30ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை, ஆகாஷ்வாணியின் மன் கீ பாத் நிகழ்ச்சி மூலம், இந்தியா, மற்றும், உலகெங்கிலும் உள்ள மக்களுடன், தமது எண்ணங்களை பகிர்ந்து கொள்கிறார். பிரதமரின் இந்த 128ஆவது மனதின் குரல் நிகழ்ச்சி, அன்றைய தினம் காலை 11 மணிக்கு, ஆகாஷ்வாணி, மற்றும், தூர்தர்ஷன் தொலைக்காட்சியின் அனைத்து அலைவரிசைகளிலும், AIR-News இணைய தளம் மற்றும் News-on-Air மொபைல் செயலியிலும் ஒலிபரப்பாகும். AIR-News, DD-News, பிரதமர் அலுவலகம், மற்றும், மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை அமைச்சகத்தின் You-Tube அலை வரிசைகளிலும், இந்நிகழ்ச்சி நேரடியாக இடம்பெறும். ஆகாஷ்வாணியில், மன் கீ பாத் ஹிந்தி ஒலிபரப்பை தொடர்ந்து, அதன் பிராந்திய மொழி வடிவங்கள் ஒலிபரப்பாகும்.

-----------------------

ராஜ்நாத் (13)

வலுவான, பாதுகாப்பான இந்தியாவை உருவாக்குவதன் மூலமாகவே, முன்னேறிய இந்தியாவை உருவாக்க முடியும் என்று பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில், பாதுகாப்பு குறித்த சாணக்கியா பேச்சு வார்த்தை மாநாட்டில் உரையாற்றிய அவர், அமைதி, மற்றும், பேச்சு வார்த்தையில் நம்பிக்கை உள்ள நாடாக, இந்தியா தொடர்ந்து நீடிக்கும் என்றாலும், நாட்டின் இறையாண்மைக்கும், மக்களின் பாதுகாப்பிற்கும், பிரச்சனை ஏற்பட்டால், சமரசங்களுக்கு இடம் கொடாது என்றார். நவீன தொழில்நுட்பங்கள் மூலமான வளர்ச்சி, மற்றும், ஜனநாயகம் மீதான நம்பிக்கை காரணமாகவே, உலக அளவில், சமநிலை, ஸ்திரத் தன்மை, மற்றும், பொறுப்புணர்வின் குரலாக இந்தியா மேம்பட்டுள்ளதாக, பாதுகாப்பு அமைச்சர் கூறினார். இந்தோ-பசிபிக், மற்றும், தெற்குலக நாடுகள், இந்தியாவை நம்பகமான கூட்டாளி நாடாகக் காண்பதாக, அவர் மேலும் குறிப்பிட்டார்.

------------------------

பவர் இன்டக்ஸ் (8)

ராணுவ பலம், பாதுகாப்புக் கூட்டாண்மை, பொருளாதார வல்லமை, தூதரக உறவுகள், கலாச்சார தொடர்பு உள்ளிட்ட 131 அம்சங்களின் அடிப்படையில், புறச்சூழல் தாக்கங்களை ஏற்படுத்துவதில் பலம் பொருந்தியதாகத் திகழும் நாடுகளின் பட்டியலில், இந்தியா 3ஆம் இடம் பெற்றுள்ளது. அமெரிக்கா, சீனாவும், முதல் 2 இடங்களை பிடித்துள்ளன. இவ்வாண்டு இந்தியா, பலம் பொருந்திய நாடு என்பதற்கான குறைந்தபட்சக் குறியீட்டு அளவைத் தாண்டி, தொடர்ந்து முன்னேறி வருவதும் குறிப்பிடத்தக்கது.

------------------------

வானிலை (18)

வங்கக் கடலில் உருவான டித்வா புயல், இன்று சென்னைக்கு தெற்கே, 530 கி.மீ தொலைவிலும், புதுச்சேரிக்கு தெற்கு—தென்கிழக்கே, 430 கி.மீ, மற்றும், காரைக்காலுக்கு தெற்கு-தென்கிழக்கே, 320 கி.மீ தொலைவிலும் மையம் கொண்டுள்ளது. இது, வடக்கு-வடமேற்கு திசையில் மேலும் நகர்ந்து, வரும் 30ஆம் தேதி அதிகாலையில், வடதமிழகம்-புதுச்சேரி, மற்றும், அதை ஒட்டிய தெற்கு ஆந்திரக் கடலோரப் பகுதிகளுக்கு அருகே நிலவக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. இதன் காரணமாக, தமிகழத்திலும், புதுச்சேரியிலும், அடுத்த சில நாட்களுக்கு மழை நீடிக்கலாம் என எதிர்பாரக்கப் படுகிறது. இன்றைய தினம், சேலம், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, விழுப்புரம் மாவட்டங்கள், மற்றும், புதுச்சேரியில், கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாக வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு உள்ளிட்ட மாவட்டங்களில் மிக கனமழை பெய்யக் கூடும் என்றும், திருவள்ளூர், மற்றும், ராணிப்பேட்டை மாவட்டங்களில், அதிகனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. மீனவர்கள் கடலுக்குள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர். இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, ராமநாதபுரத்தில், 3 செ.மீ மழை பதிவாகி உள்ளது.

------------------------

புதுச்சேரி புயல் (15)

புதுச்சேரியில் டித்வா புயல் நிலவரங்களை எதிர்கொள்ள, அரக்கோணத்தில் இருந்து, 60 பேர் கொண்ட பேரிடர் மீட்புக் குழுவினர் வரவழைக்கப் பட்டுள்ளனர். இவர்கள் இன்று மாவட்ட ஆட்சியரை சந்தித்து ஆலோசனை மேற்கொண்டனர். புயல் நிலவரங்களை எதிர்கொள்ள, மாவட்ட நிர்வாகம் தயார் நிலையில் உள்ளதாகவும், 312 தற்காலிக தங்குமிடங்களும், வருவாய், காவல், தீயணைப்பு, பொதுப்பணி,

மற்றும், மீன்வளத் துறையினர் அடங்கிய 16 அவசரகால உதவிக் குழுக்களும், அமைக்கப் பட்டுள்ளதாக, மாவட்ட ஆட்சியர் திரு. குலோத்துங்கன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறினார். கடந்த மழையின் போது மழைநீர் தேங்கிய பகுதிகளில், 76 மோட்டார் பம்புகள், மற்றும், 46 ஜேசிபி இயந்திரங்கள், தயார் நிலையில் வைக்கப் பட்டுள்ளதாகவும், 24 மணி கட்டுப்பாட்டு அறை அமைக்கப் பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார். புதுச்சேரிக்கு வந்துள்ள 2 பேரிடர் மீட்புக் குழுக்களில் ஒரு குழுவினர், காரைக்காலுக்கு அனுப்பப் பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார். . மாவட்ட ஆட்சியரின் பேட்டியில் இருந்து ஒருபகுதி.....

(வாய்ஸ்-குலோத்துங்கன்)

------------------------

S-I-R (10)

நாட்டில் 2ஆம் கட்டமாக, 12 மாநிலங்கள், மற்றும், யூனியன் பிரதேசங்களில், தற்போது நடைபெற்று வரும் S-I-R இயக்கத்தின் கீழ், சுமார் 50.68 கோடி வாக்காளர்களுக்கு, கணக்கெடுப்புப் படிவங்கள் வழங்கப்பட்டு, இதில் சுமார் 38 கோடி படிவங்கங்களின் தரவுகள், டிஜிட்டல் வடிவத்திற்கு மாற்றப் பட்டுள்ளதாக, தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. மொத்தம் வழங்கப்பட வேண்டிய படிவங்களின் எண்ணிக்கையில் முறையே, 99.43, மற்றும், சுமார் 74 சதவிகிதமாகும். புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் இதுவரை, 97.83 சதவிகித வாக்காளர்களுக்கு படிவங்கள் வழங்கப்பட்டு, 83.36 சதவிகித படிவங்கள், டிஜிட்டல் மயமாக்கப் பட்டுள்ளன.

------------------------

திரைபட விழா (16)

கோவாவில், 56ஆவது இந்திய சர்வதேச திரைப்பட விழா, இன்று மாலையுடன் முடிவிற்கு வருகிறது. நிறைவு விழாவில், கோவா முதலமைச்சர் திரு. பிரமோத் சாவந்த், மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறைச் செயலர் திரு. சஞ்சய் ஜாஜூ, விழாக் குழுவின் தலைவர் சேகர் கபூர் உள்ளிட்டோர் பங்கேற்கிறார்கள். விழாவின் நிறைவாக இன்றைய தினம், தாய்லாந்தில் தயாரிக்கப்பட்ட, Useful Ghost திரைப்படம் திரையிடப் படுகிறது. நிறைவு விழாவின் போது, விழாவின் சிறந்த படத்திற்கான தங்கமயில் விருது வழங்கப்பட உள்ளது. வெள்ளி மயில் விருது, நடுவர் குழுவின் சிறப்பு விருது உள்ளிட்ட சிறப்பு விருதுகளும் வழங்கப்படுகின்றன. 50 ஆண்டுகளுக்கும் மேலாக திரையுலகில் பயணித்து வரும் நடிகர் ரஜினிகாந்த், இன்றைய விழாவில் கவுரவிக்கப் படுகிறார். 86ஆவது இந்திய சர்வதேச திரைப்பட விழாவில், 81 நாடுகளில் இருந்து, 240க்கும் மேற்பட்ட திரைப்படங்கள் திரையிடப் பட்டதும், திரையுலக பிரபலங்கள் மூலமான மாஸ்டர் கிளாஸ் நிகழ்வுகள், வேவ்ஸ் பசார் உள்ளிட்ட அம்சங்கள், திரைப்பட விழாவில் மிகுந்த வரவேற்பை பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

-----------------------

தொழில்-வர்த்தகம் (12)

சுயசார்பு இந்தியா என்பது தற்போது, அனைத்துத் தரப்பினரின் பங்கேற்புடன் கூடிய, மக்கள் இயக்கமாகவே மேம்பட்டுள்ளதாக, மத்திய தொழில்-வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில், FICCI தொழில்-வர்த்தகக் கூட்டமைப்பின் வருடாந்திர பொதுக் குழுக் கூட்டத்தில் உரையாற்றிய அவர், பிரதமர் திரு. நரேந்திர மோடியின் அயராத முயற்சிகளால், சுயசார்புக்கான மக்களின உணர்வுகள், பொருளாதார முன்னேற்றத்தின் மையமாகவே மாறி இருப்பதாக கூறினார். பல்வேறு நாடுகள் உடனான இந்தியாவின் வரியில்லா வர்த்தக ஒப்பந்தங்களால், இந்தியாவில் வர்த்தக, மற்றும், முதலீட்டு வாய்ப்புகள்

அதிகரித்து இருப்பதாக அமைச்சர் தெரிவித்தார். இந்தியா தற்போது, அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் உள்ளிட்ட நாடுகளுடன், இதுகுறித்து பேச்சு வார்த்தை நடத்தி வருவதாக அவர் மேலும் கூறினார்.

------------------------

_ஜல் சக்தி (11)_

ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ் நாடு முழுவதும் 15 கோடி கிராமப்புற வீடுகளுக்கு, குழாய் மூலமான குடிநீர் இணைப்பு வழங்கப் பட்டுள்ளதாக, மத்திய ஜல் சக்தி அமைச்சர் திரு. சி.ஆர். பாட்டீல் கூறியுள்ளார். புதுடெல்லியில் இன்று நடைபெற்ற, சுஜலம் பாரத் உச்சி மாநாட்டில் உரையாற்றிய அவர், அனைத்து மக்களுக்கும், நீடித்த அடிப்படையில், நீர்ப் பாதுகாப்பு வழங்குவதே, அரசின் குறிக்கோள் ஆகும் என்றார். இந்த அடிப்படையில்தான், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டத்திற்கான நிதியில் 65 சதவிகிதம், நீர் பற்றாக்குறை அதிகம் உள்ள பகுதிகளுக்கு ஒதுக்கப் படுவதாகவும், இந்நிதி மூலம், நிலத்தடி நீர்மட்டத்தை மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப் படுவதாகவும், அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

------------------------

_ரயில்வே அமைச்சர் (9)_

ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் இன்று, சண்டிகர் அருகே மோகாலியில் உள்ள செமி கண்டக்டர் ஆய்வத்தை நேரடியாக பார்வையிட்டார். இதற்கென டெல்லியில் இருந்து சண்டிகர் செல்லும் வழியில், ரயில் பாதை பராமரிப்புப் பணியாளர்கள், மற்றும், சிக்னல் ஊழியர்களை அவர் சந்தித்து கலந்துரையாடினார். உலக அளவிலான, ரயில் பாதை பராமரிப்பு, மற்றும் சிக்னல் நடைமுறைகள் குறித்த தமது அனுபவங்களை அவர் பகிர்ந்து கொண்டு, முற்றிலும் பாதுகாப்பான நடைமுறைகளை பின்பற்ற, ரயில்வே ஊழியர்கள் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

------------------------